RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 261 | செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மதுராந்தகத்தில் இன்று முதல்வர் விஜய் பிரச்சாரம் : 7 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி



சென்னை: செப்.25-

மதுராந்தகத்தில் முதல்வர் விஜய் இன்று (செப்டம்பர் 25) பிரசாரம் செய்யவுள்ள நிலையில், 7,000 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

மதுராந்தகம் சட்டசபை தொகுதி இடைத்தேர்தல், அடுத்த மாதம், 6ம் தேதி நடக்கிறது. அ.தி.மு.க.,வில் இருந்து எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்து, த.வெ.க.,வில் இணைந்த மரகதம் குமரவேலுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது.

மரகதம் குமரவேலை ஆதரித்து அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை தொடர்ந்து, மதுராந்தகம் தொகுதியில், முதல்வர் விஜய் இன்று பிரசாரம் செய்ய உள்ளார். இதற்காக, சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், ஆத்துார் சுங்கச்சாவடி அருகே பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு இன்று (செப்டம்பர் 25) பிற்பகலில், தனது பிரசார வாகனத்தில் நின்றபடி, முதல்வர் விஜய் பேசவுள்ளார்.

இந்த பிரசார கூட்டத்தில் பங்கேற்க, த.வெ.க., மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் 7,000 பேருக்கு, 'கியூஆர்' குறியீடுடன் கூடிய அனுமதி சீட்டுகள் வழங்கப்பட்டு உள்ளன.

மரகதம் குமரவேல் பிரசாரம் செய்யும் இடங்களில், சிலர் பிரச்னைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அவருக்கு வெற்றி வாய்ப்பு குறைந்துள்ளதாக, நிர்வாகிகள் புகார் கூறி வருகின்றனர். எனவே, தீவிர பிரசாரம் வாயிலாக, மரகதம் குமரவேல் வெற்றி வாய்ப்பை உறுதி செய்ய, முதல்வர் விஜய் திட்டமிட்டுள்ளார்.

## பொறுப்புடன் பணியாற்றுங்கள்.. வெளிப்படைத்தன்மை மிக முக்கியம் மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தல்

புதுடில்லி: செப்.25-

மத்திய அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் செயல்திறனை அமைச்சர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் விட்டுக் கொடுக்கக் கூடாது என, பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் பங்கேற்ற 2 நாள் ஆய்வுக் கூட்டம் டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடந்தது. அரசு நிர்வாகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது, மக்கள் நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது மற்றும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.



கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: மத்திய அரசின் திட்டங்கள், சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள கடைக்கோடி மனிதரையும் தடையின்றி சென்றடைய வேண்டும். நிர்வாகத்தில் எந்தவொரு இடத்திலும் தேக்க நிலை ஏற்படுவதை அனுமதிக்க முடியாது.

மூன்று தாரக மந்திரங்கள்:

அரசு நிர்வாகத்தில் 'வெளிப்படைத்தன்மை', 'பதில் சொல்லும் பொறுப்பு' மற்றும் 'அதிவேக செயல்திறன்' ஆகிய மூன்றும் மிக அவசியம். அமைச்சகங்களின் செயல்பாடுகள் அனைத்தும் பொதுமக்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும் வகையில், நவீன டிஜிட்டல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு:

ஒவ்வொரு அமைச்சகமும் தங்களுக்குள் சுவர்களை எழுப்பிக் கொள்ளாமல், ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். திட்டங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதில் அமைச்சர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## ஐஐடி மும்பை மாணவர் தற்கொலை விவகாரம்: பெற்றோருக்கு ராகுல் காந்தி ஆறுதல்

புதுடெல்லி, செப்.25-

ஐஐடி மும்பை மாணவர் சாஹில் வகோடே தற்கொலைக்கு நீதி கோரும் போராட்டத்தில் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வதாக அவரது பெற்றோருக்கு ராகுல் காந்தி உறுதி அளித்துள்ளார்.



ஐஐடி மும்பை நிறுவனத்தில் இரண்டாம் ஆண்டு படித்து வந்த சாஹில் வகோடே (20), கடந்த வெள்ளிக்கிழமை (செப். 18) நடைபெற்ற இடைப்பருவத் தேர்வின் போது கைப்பேசியைப் பயன்படுத்தி ஏஐ தளம் மூலம் விடை தேட முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

தேர்வறைக்குப் பொறுப்பாளராக இருந்த பேராசிரியரும் நிர்வாக விவகாரங்களுக்கான டீனுமான சூர்ய நாராயண துல்லா அவரை கண்டித்ததாகக் கூறப்படுகிறது. தேர்வு முடிந்த சில மணி நேரங்களிலேயே வகோடே தனது விடுதி அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தங்கள் மகனின் தற்கொலைக்கு சாதி பாகுபாடே காரணம் என்று மாணவரின் தந்தை ரவீந்திர வகோடே மற்றும் தாய் சோனாலி வகோடே ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும், பேராசிரியர் சூரியநாராயண டுல்லா, ஐஐடி மும்பை இயக்குநர் ஷிரிஷ் கேடரே ஆகியோரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி ஐஐடி மும்பை நுழைவு வாயிலுக்கு வெளியே இன்று காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்காக அவர்கள், வாஷிம் மாவட்டத்தில் இருந்து மும்பைக்கு வந்து கொண்டிருந்தபோது ராகுல் காந்தி அவர்களிடம் வீடியோ கால் மூலமாக உரையாடியுள்ளார். அப்போது, மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர் சிவராஜ் மோரே, இளைஞர் காங்கிரஸ் தலைவர் உதய் பானு சிப் ஆகியோரும் மாணவரின் பெற்றோருடன் இருந்துள்ளனர்.

சாஹில் வகோடேயின் மரணத்துக்கு நீதி கோரும் போராட்டத்தில் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வதாக அவரது பெற்றோருக்கு ராகுல் காந்தி உறுதி அளித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள ஐஐடி மும்பை, சூர்ய நாராயண துல்லாவை டீன் பதவியிலிருந்து பணியிடை நீக்கம் செய்துள்ளது. மேலும், தற்போது அவர் விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார்.

மாணவரின் தற்கொலை தொடர்பாக மகாராஷ்டிர காவல்துறையும் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.

## "தலைமைத் தேர்தல் ஆணையர் மீது நடவடிக்கை தேவை" - பிரியங்கா காந்தி

வயநாடு, செப்.25-

சட்டவிரோதச் செயல்கள் நடந்திருந்தால், மற்ற குற்றவாளிகளைப் போலவே தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

கேரளாவின் வயநாடு தொகுதி எம்பியான காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி, வயநாடுக்கு அருகில் உள்ள கல்பெட்டாவில் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "நமது ஜனநாயக நடைமுறையைச் சிதைக்க முயலும் எவரும் இந்த நாட்டுக்கு தீங்கு இழைக்கிறார்கள் என்றே அர்த்தம். இதுவே எங்களின் மிகத் தெளிவான நிலைப்பாடு.

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்தால், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியில் இருப்பவருக்கு இப்போதுள்ளதைப் போன்ற சட்டப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று நான் கருதவில்லை.

வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்வது, பெருமளவிலான வாக்காளர்களின் பெயர்களை நீக்குவது கடுமையான குற்றம். வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 13 கோடி வாக்காளர்களின் பெயர்களை நீக்குவது ஜனநாயகம்,



அரசியலமைப்பு மற்றும் நாட்டுக்கு எதிரான குற்றச் செயல்களாகும்.

முறைகேடுகள் குறித்து தெரிந்திருந்தும், சக ஆணையர்கள் அதுபற்றித் தகவல் தெரிவித்தும் அவற்றை அவர் தொடர்ந்து அனுமதித்திருந்தால் அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சட்டவிரோதச் செயல்கள் தனது கண் முன்பாக நடப்பது தெரிந்தும், சக ஆணையர்கள் அதைச் சுட்டிக்காட்டியும் அதை புறக்கணித்து வேண்டுமென்றே நியாயமற்ற தேர்தல் நடைபெற அனுமதித்திருந்தால், மற்ற குற்றவாளிகளைப் போலவே அவர் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் அவர் விசாரிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் நடைமுறைகள் மற்றும் சிறப்பு தீவிர திருத்தம் செயல்முறை தொடர்பான முடிவுகள் மற்றும் உத்தரவுகள் குறித்து, தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் 10 மாதங்களில் குறைந்தது 14 முறை ஆட்சேபனைகளைத் தெரிவித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்ட செய்தியை அடுத்து இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து பிரியங்கா காந்தி கூறி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இதனிடையே, இன்று மாலை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சிறப்பு செய்தியாளர் சந்திப்பை நடத்த உள்ளார். இந்த விவகாரம் குறித்து அவர் வலிமையான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "கனிம வளத்தைச் சுரண்டி அபராதம் கட்டுவதுதான் தவெகவின் தூய ஆட்சியா?" - வானதி சீனிவாசன்

சென்னை, செப்.25-

"சட்ட விரோதமாக கனிம வளங்களைச் சுரண்டி குற்றச்சாட்டுக்கு உள்ளாகி கோடிக்கணக்கில் அபராதம் எதிர்கொள்ளும் தவெக நிர்வாகிகளுக்கு நீங்கள் சொன்ன அந்த தூய ஆட்சிக் கொள்கை பொருந்தாதா?" என முதல்வர் விஜய்க்கு பாஜகவின் வானதி சீனிவாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருகே நிலையூர் கருவேலம்பட்டி பகுதியில் அரசு புறம்போக்கு நிலம் மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவை மீறிய குவாரி நடவடிக்கைகள் தொடர்பான வழக்கில் தவெக நிர்வாகிகள் பாரி மற்றும் முருகேசன் ஆகியோருக்கு திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் ரூ.7.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தூய சக்தியின் ஆட்சி என்று கூறிக் கொள்ளும் தவெக நிர்வாகிகளின் நிஜ முகத்தை அரங்கேற்றியிருக்கிறது.

என் கட்சியினராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும் ஊழல் செய்தவர்களை விடமாட்டேன் என்று சட்டப்பேரவையில் வீர வசனம் பேசிய முதல்வர் விஜய், சட்ட விரோதமாக கனிம வளங்களைச் சுரண்டி குற்றச்சாட்டுக்கு உள்ளாகி கோடிக்கணக்கில் அபராதம் எதிர்கொள்ளும் உங்கள் கட்சி நிர்வாகிகளுக்கு நீங்கள் சொன்ன அந்த தூய ஆட்சிக் கொள்கை பொருந்தாதா?

இந்த விவகாரத்தில் சட்டவிரோத கனிமவளச் சுரண்டலில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## "அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்க" - நயினார் நாகேந்திரன்

சென்னை, செப்.25-

'அடுத்தடுத்து இரண்டு அரசுப் பள்ளிகளில் காலை உணவு சாப்பிட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, போர்க்கால அடிப்படையில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு மாணவர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மேலகண்டைப் பள்ளியில் காலை உணவில் பல்லி விழுந்து 11 பிஞ்சுக் குழந்தைகள் பாதிக்கப்பட்ட அதிர்ச்சி விலகுவதற்குள், அடுத்ததாகத் திருவள்ளூர் மாவட்டம் கொட்டையூர் நடுநிலைப் பள்ளியிலும் உணவில் பல்லி விழுந்து 36 மாணவச் செல்வங்கள் வாந்தி, மயக்கமடைந்து திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பது பேரதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்துகிறது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்குச் 'சத்துணவு வழங்குகிறோம்' என்ற போர்வையில் பிஞ்சுக் குழந்தைகளின் உயிருக்கே உலை வைக்கும் கொடூரத்தை முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு அப்பட்டமாக அரங்கேற்றி வருகிறது.

பள்ளிச் சமையலறைகளில் எவ்வித அடிப்படைச் சுகாதார ஆய்வோ, தரப் பரிசோதனையோ செய்யாத திறனற்ற தவெக ஆட்சியின் உச்சக்கட்ட நிர்வாகச் சீர்கேடே அடுத்தடுத்து அரங்கேறும் இந்த அவலங்களுக்கு முழுமுதற் காரணம்.

தவெக ஆட்சியில் நிர்வாகத் தோல்விகள் தொடர்கதையாகிவிட்டன. எங்கள் ஏழை, எளிய குழந்தைகளின் உயிரோடு விளையாடும் இந்த விபரீதத்தை முதல்வர் விஜய் உடனடியாக நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தரமான உயர் சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இத்தகைய அலட்சியத்திற்குக் காரணமான அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது உடனடியாகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, போர்க்கால அடிப்படையில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு மாணவர்களின் உணவுப் பாதுகாப்பை விரைந்து உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.



# அனைத்து கல்வி நிறுவனங்களின் முதல்வர்/தலைமையாசிரியர்/ ஒருங்கிணைப்பாளர்களுக்கான செயல் விளக்கக் கூட்டம்

தேனி, செப்.25-

தேனி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு அனைத்து கல்வி நிறுவனங்களின் முதல்வர்/ தலைமையாசிரியர்/ ஒருங்கிணைப்பா ளர்களுக்கான செயல் விளக்கக் கூட்டம் மாவட்ட வருவாய்அலுவலர்.ப.ராஜகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதலின்படி, தேனி மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களை (ELC-Electoral Literacy Clubs) நிறுவி 15 முதல் 25 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு ER-ONET, வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் முறை, தேர்தல் நடைபெறும் முறை, வாக்கு எண்ணிக்கை நடைமுறை மற்றும் தேர்தல் ஆணையத்தின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு அனைத்து கல்வி நிறுவனங்களின் முதல்வர்/ தலைமையாசிரியர்/ ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு செயல் விளக்கக்கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).இராமகிருஷ்ணன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) மருதுபாண்டி மற்றும் கல்வி நிறுவனங்களின் ELC ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



■ தேனி மாவட்டம், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடங்கியது. இதன் முதல் விற்பனையை தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், குத்துவிளக்கேற்றி வைத்து தொடங்கி வைத்தார்கள். தீபாவளியை முன்னிட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் பல்வேறு ரக கைத்தறி மற்றும் பட்டுத் துணிகள் சிறப்பு தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகின்றன.




# மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் போதை தடுப்பு விழிப்புணர்வு

வாணியம்பாடி, செப்.25-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 23/9/2026 அன்று புதன்கிழமை கல்லூரியின் போதை பொருள் தடுப்புச் சங்கம் தேசிய மாணவர் படை மற்றும் 10TN பெட்டாலியன் NCC வேலூர் ஒருங்கிணைந்து 'NASHA MUKT BHARAT AB-HIYAN' விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை கல்லூரி தலைவர் வி. திலீப் குமார் ஜெயின், செயலாளர் ஆனந்த் சிங்வி, கல்லூரி முதல்வர் டாக்டர். ம.இன்பவள்ளி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

கல்லூரி வளாகத்தின் புறத்தே போதையில்லாம் இந்தியா உறுதிமொழி, சிறப்புரை, விழிப்புணர்வு, தெரு நாடகம் நாசா முகத் பாரத் விழிப்புணர்வு பேரணி என நிகழ்வில் பொதுமக்களும் நான் இருக்கும் மேற்பட்ட மாணவிகளும் பங்கு கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்வை சிறந்த முறையில் Lt. Dr. M.சாருமதி, Esm C.ராஜேந்திரன், Dr. M. உஷா ஒருங்கிணைந்து கொடுத்தனர்.

# மதுராந்தகம் தொகுதியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் தீவிர வாக்கு சேகரிப்பு

மதுராந்தகம், செப்.25-

திமுக கழக தலைவர் மு க ஸ்டாலின் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் அலோசனைபடி மாட்ட துணை அமைப்பாளர் தில்லைக்குமார் முன்னிலையில் மாவட் துணை அமைப்பாளர சங்கர் ,அமைப்புசாரா ஒட்டுனர் அணி அமைப்பாளர் விஜயன், பூண்டி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராமாராவ், பூண்டி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் குமரேசன்



உட்பட மதுராந்தகம் திமுக வேட்பாளர் ஜ.பரந்தாமனுக்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

# உதகை ஊராட்சி மற்றும் கீழ்குந்தா பேரூராட்சி ஆகியவற்றிற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிதிட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, செப்.25-

நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேல்குந்தா, பாலக்கொலா, மேலூர் ஊராட்சிகள் மற்றும் பிக்கட்டி, கீழ்குந்தா பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் , நீலகிரி மாவட்டம் பிக்கட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பொது நூலக நிதி திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் நூலக கட்டடம் மற்றும் அதே பகுதியில் செயல்பட்டு வரும் நூலகத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பிக்கட்டி பேரூராட்சி அலுவலகத்தில், பராமரிக்கப்படும் பதிவேடுகள், பொதும க்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், பிக்கட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதுவதையும், பள்ளியின் சமையலறை யினையும், பிக்கட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும், 15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய கூடுதல் கட்டடத்தினையும், அதே பகுதியில் பழங்குடியினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.24.60 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் தச்சு மற்றும் மண்பாண்ட தொழில் பட்டறையினையும், பிக்கட்டி மற்றும் கீழ்குந்தா பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் வள மீட்பு பூங்காவினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கீழ்குந்தா பேரூராட்சி பகுதியில் சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்



கீழ் ரூ.34.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள புதிய சமுதாய கூடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு சமுதாய கூடத்தினை நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் பின்னர் உதகை ஊராட்சி ஒன்றியம், மேல் குந்தா ஊராட்சிக்குட்பட்ட கூர்மையாபுரம் பகுதியில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ரூ.4.16 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சுகாதார வளாகத்தினையும், மேல் குந்தா ஊராட்சி பகுதியில் ரூ.3.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பிளாஸ்டிக் அரைக்கும் கூடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், மேல் குந்தா ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பராமரிக்கப்படும் பதிவேடுகள், பொதும க்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், மேல் குந்தா ஊராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் நகர் பகுதியில் ரூ.3.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் 1 தொகுப்பு வீட்டினையும், அதே பகுதியில் விக்சித் பாரத் ரோஸ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (VB G RAM G) (கிராமின்) 125 நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், முள்ளிமலை அரசு உயர்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் மற்றும் சமையலறையினையும், உதகை ஊராட்சி ஒன்றியம், பாலக்கொலா ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், செயல் அலுவலர்கள் மனோகரன் (பிக்கட்டி), வட்டாட்சியர்கள் குணவதி (குந்தா), திரு.செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்ஸ்ரீதரன் (உதகை), சுப்ரமணி, (குன்னூர்), இளநிலை பொறியாளர் சுரேஷ்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.



# சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, செப்.25-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.



# வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர், வெள்ளானூர் ஊராட்சிகளில் 3 புதிய டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா

மாதவரம், செப்.25-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பொத்தூர் ஊராட்சி உப்பரப்பாளையம் அண்ணாமலை நகர், வெள்ளானூர் ஊராட்சி கொள்ளுமேடு ரெட்டை குளம், லட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 3 மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) துவக்க விழா ஆவடி கோட்டம் மின் பகிர்மான செயற்பொறியாளர் கிறிஸ்டோபர் லியோ ராஜ் தலைமையில் நடைபெற்றது.உதவி செயற்பொறியாளர் ராஜேஷ்சன், உதவி பொறியாளர் சதக்கத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய மின்மாற்றி டிரான்ஸ்பார்மர்களை துவக்கி வைத்து பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.இதில் தவெக ஒன்றியச் செயலாளர்கள் மணிவேல், ஜெய்சங்கர், மணிமாறன், மேகநாதன், மைக்கேல்ராஜன், செல்வக்குமார், முகிலன், கொள்ளுமேடு தவெக நிர்வாகிகள் லோகேஸ்வரன், சரண்குமார், தீபக், ஞானவேல், ரேகா, கல்பனா, மணிகண்டன் உள்ளிட்ட மின்வாரிய ஊழியர்கள், பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டம், உதகை 9-வது மைல், பகல்கோடு மந்து தோடா சமுதாய நலக்கூடத்தில், இந்திய அரசின் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தோடா பெண்களுக்கான தோடா எம்பிராய்டரி குறித்த சிறப்பு பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரூபன் சங்கர்ராஜ் உட்பட பலர் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 23/09/2026 -- 25/09/2026 ஆகிய மூன்று நாட்கள் திருப்பத்தூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக மகளிர் சய உதவிக்குழுவினரின் 'கல்லூரி சந்தை' தொடங்கப்பட்டது சுமார் 40 பல்பொருள் அங்காடிகள் இருந்தது. இந்நிகழ்ச்சியை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன் மற்றும் மகளிர் சுய உதவித் திட்ட குழுவின் இயக்குனர் விஜயகுமாரி தொடங்கி வைத்து பார்வையிட்டனர், இந்நிகழ்வு பெண்களின் பொருளாதார சுதந்திரம் சமூக முன்னேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைத்திருந்தது.

# செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா

மாதவரம், செப்.25-

மாதவரம் தொகுதி செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா தலைமை இமாம் மௌலவி முனைவர் காஜா முயீனுத்தீன் ஜமாலி தலைமையில் செங்குன்றம் கூட்ரோடு அருகில் நடைபெற்றது. மஸ்ஜிதே ஆயிஷா துணைத்தலைவர் ஹாபிழ் டஅக்பர் பாஷா கிராஅத்ஓத, மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் காஜாமொய்தீன், செயலாளர் அப்துல்லத்தீப், பொருளாளர் முஹம்மது ஆஷிக்அலி, கமிட்டி உறுப்பினர் சாகுல்அமீத் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவரும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான நவாஸ்கனி, தேனி




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.எம். ஹாரூண்ரஷீத், காங்கிரஸ் கட்சி திருவள்ளூர் தெற்கு மாவட்டத் தலைவர் காங்கைகுமார், வழக்கறிஞர் ஷேக்முஹம்மது அலி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பின்னர் அடிக்கல் நாட்டினர்.நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சேட்டு, ஷாநவாஸ், கலீல்ரஹ்மான், மேலாளர் கனி, முன்னாள் செயலாளர் சையத் அஹ்மத், முகம்மதுயாசின் மதார், சமியுல்லா, மக்பூல்பாஷா ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர். மஸ்ஜிதே ஆயிஷா துணை இமாம் மௌலவி எஸ். அபுல் ஹசன் பிலாலி தொகுத்து வழங்கினார். இதில் மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகிகள் உறுப்பினர்கள், செங்குன்றம் சுற்றுவட்டார பள்ளிவாசல் ஜமாஅத்தார்கள், வணிகப் பெருமக்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.முடிவில் கமிட்டி உறுப்பினர் அப்துல்வாஹித் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# காவேரிப்பட்டினத்தில் சாலையோரம் குப்பைகளை எரிப்பதால் புகைமூட்டம்

## பள்ளி மாணவர்கள், பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படும் அபாயம் பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை





கிருஷ்ணகிரி, செப்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ரவி தியேட்டர் அருகே உள்ள ஆஞ்சநேயர் கோயில் பகுதியில் சாலையோரத்தில் தினமும் குப்பைகள் கொட்டப்பட்டு, அவற்றை சுகாதாரப் பணியாளர்கள் தீ வைத்து எரிப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த பகுதியில் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் தினமும் அதிகளவில் சென்று வருகின்றனர். சாலையோரத்தில் குவிக்கப்படும் குப்பைகளுக்கு தீ வைக்கப்படுவதால், அப்பகுதி முழுவதும் புகை பரவி வருகிறது. குறிப்பாக பள்ளி நேரங்களில் புகைமூட்டம் ஏற்படுவதால், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமத்துடன் சாலையை கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குப்பைகள் எரிக்கப்படும்போது வெளியேறும் புகையால் மூச்சு விடுவதில் சிரமம், கண் எரிச்சல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும், சாலையோரத்தில் குப்பைகள் குவிந்து கிடப்பதால் அப்பகுதியின் சுகாதாரமும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதனால், குப்பைகளை சாலையோரத்தில் கொட்டுவதை தவிர்த்து, பேரூராட்சி நிர்வாகம் உரிய குப்பை சேகரிப்பு மற்றும் மேலாண்மை இடத்திற்கு கொண்டு சென்று, பொதுமக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அறிவியல் முறையில் கையாள வேண்டும் என பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், பள்ளி மாணவர்கள் செல்லும் முக்கிய சாலையோரப் பகுதிகளில் குப்பைகளை கொட்டி தீ வைப்பதை உடனடியாக தடுத்து, தினசரி தூய்மைப் பணிகளை முறையாக மேற்கொள்ள பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மீண்டும் போட்டியிடும் த.வெ.க வேட்பாளர்களின் மீது வெறுப்பு, எதிர்ப்பு இருந்தால் மக்கள் நிச்சயம் அவர்களுக்கான தீர்ப்பு தருவார்கள், ஆனால் தேர்தல் வரை பொருத்து இருக்கனும் தொல்.திருமாவளன் பேச்சு




தாம்பரம் செப்.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் வி.சி.க கட்சியின் போக்குவரத்து தொழிலாளர்கள் சங்கமான தொழிலாளர் விடுதலை முன்னனி மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது, இதில் கலந்துக் கொண்ட விடுதலைச் சிறுத்தை கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களிடம் பேசும்போது:-

போக்குவரத்து தொழிலாளர்களை அரசு நிரத்தர் ஊழியராக்கிட வேண்டும் என விசிக கட்சி அரசை வலியுறுத்தும்,ஆளும் கட்சியில் அங்கம் வகிப்பதால் தொழிலாளகளின் கோரிக்கைகளை என்னும் விட்டுக் கொடுக்காது என்றார்,

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசும்போது:- மதுராந்தகம், தாரபுரம் ஆகிய இரண்டு இடைத்தேர்தல் தொகுதிகளில் அதிமுகவில் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து தவெக இணைந்தவர்களே வேட்பாளராக நிற்பதால் மக்களிடம் எதிர்ப்பு உள்ளது குறித்து கேட்டபோது:-

ராஜினாமா செய்து விட்டு மீண்டும் போட்டியிடும் வேட்பாளர் மீது வெறுப்பு எதிர்ப்பு இருந்தால் மக்கள் நிச்சயம் அவர்கள் காண தீர்ப்பு தருவார்கள் இடைத்தேர்தலில் வரை போட்டு இருந்து பார்ப்போம் என்றார்

சோபா விமர்சனம் குறித்து கேட்டபோது:-

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி எங்களை சோபா விமர்சனம் செய்ததாக நான் எண்ணவில்லை அப்போதே அதிமுகவினர் குழுவாக இருந்ததால் அப்போது சோபா விமர்சனம் மிகுந்தது அதனால் அதிமுகவை விமர்சித்ததாகவே நான் எண்ணுகிறேன் ஆனால் சோபா விமர்சனம் மக்களால் புறந்தள்ளப்பட்டது என்றார்..

போலி நம்பர் பிளேட் காரில் சென்றது குறித்து கேட்டபோது:-

சமூக நீதியின் சகாப்தம் நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக கலந்து கொண்டேன். வாசலில் இருந்து என்னை அவர்களின் ஜாகுவார் காரில் அழைத்துச் சென்றனர் அப்போது காரின் பதிவு எண்ணை கவனிக்கவில்லை ஆனால் ஊடகங்களில் வந்த பிறகுதான் எனக்கு இதுபோல் ஒளிப்பதிவு செய்திருந்தார்கள் என தெரிய வருகிறது அது சினிமா படப்பிடிப்பு தளம் என்பதால் இதுபோல் நிகழ்வுகள் நடந்துள்ளன எனவே நான் ஒரு பார்வையாளராக தான் அந்த அங்கு சென்றேன் என்றார்,.





# பூண்டி அருகே நெல்வாய் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி மாணவர்களுக்கு சீருடை, பேக், மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி

பூண்டி, செப்.25-

பூண்டி அடுத்த நெல்வாய் கிராமத்தில் உள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சென்னை வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி நிறுவனம் மற்றும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனம் சார்பில் பொருளாதரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சீருடை பேக் கல்விக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு வருகைபுரிந்த அனைவரையும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனர் முத்தமிழ்ச்செல்வி வரவேற்றார்

இந்நிகழ்ச்சியில் சென்னை வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி நிறுவனர் தன்வீர்அலிகான் சிறப்பு அழைப்பாளராககலந்து கொண்டு 45 ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்தை எடுத்து கூறி உரையாற்றி 2செட் சீருடை பேக் கல்விக்கான உபகரணங்களை வழங்கி சிறப்பித்தார்

இந்நிகழ்வில் மு.ஊ.ம.தலைவர் பரமேஸ்வரி, தலைமையாசிரியர் கே.மணி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் எம்.கஜேந்திரன், ஊராட்சி செயலாளர் எம். கோபி, கூனிபாளையம்பள்ளிஆசீரியர் எம்.பிரபு என். ஜி.ஒ. இளங்கோவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தனர் நிகழ்ச்சியின் முடிவில் தன்னார்வலர் பி.குமாரி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்



# மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் சாதனை கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்க்காவல்படை படையினருக்கு பாராட்டு

கிருஷ்ணகிரி, செப்.25-

மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் சாதனை படைத்த கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்க்காவல் படையினருக்கு மாவட்ட எஸ்பி. பாராட்டு தெரிவித்தார்.

தேனியில், ஊர்க்காவல் படையினருக்கு பல்வேறு பிரிவுகளில் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் நடந்தது. கடந்த 18ம் தேதி முதல் 20ம் தேதி வரை மூன்று நாட்கள் நடந்த போட்டியில் சேலம் சரக அளவிலான போட்டிகளில், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த ஊர்க்காவல் படையினரும் இணைந்து கலந்து கொண்டனர்.

இதில், விளையாட்டு மற்றும் தொழில்முறை பிரிவு போட்டிகளில் சாம்பியன் பட்டம் பெற்றனர். அதன்படி அணிவகுப்பு, ஸ்குவாட் டிரில், கிராஸ் கன்ட்ரி மற்றும் முதலுதவி (பெண்கள் பிரிவு) உள்ளிட்ட பிரிவுகளில் முதலிடம் பெற்றனர். அதே போல, குண்டு எறிதல், 200 மீட்டர் ஓட்டம், வாலிபால் உள்ளிட்டவற்றில் இரண்டாமிடமும் பெற்றனர்.

இது தவிர மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு மாவட்டத்தை சேர்ந்த ஊர்க்காவல் படையினர் சாம்பியன் பட்டத்தை பெற்ற சாதனை படைத்தனர். அவர்கள் அனைவரும் மாவட்ட எஸ். பி., அனிதாவை சந்தித்து, தாங்கள் வென்ற கோப்பை, பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர். வெற்றி பெற்ற வீரர்களைப் பாராட்டிய மாவட்ட எஸ்.பி., வரும் ஆண்டுகளில், மாநில அளவில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற வேண்டுமென கூறி, வாழ்த்து களை தெரிவித்தார். அப்போது, கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்க்காவல் படை ஏரியா கமாண்டர் கவுசிக்தேவ் மற்றும் ஊர்க்காவல் படை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# பெனுகொண்டாபுரம் ஏரிக்கரையில் 10 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்யும் பணி துவங்கியது



கிருஷ்ணகிரி, செப்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் பெனுகொண்டாபுரம் ஏரிக்கரையில் 10 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்யும் பணி துவங்கியது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பெனுகொண்டாபுரம் ஏரி கடந்த, 1898ம் ஆண்டு 540 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த ஏரியாகும். இந்த ஏரி நீர் மூலம், 2,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள மிக முக்கியமான ஏரிகளில் இதுவும் ஒன்று. இந்த ஏரியின் கரையில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆயிரக்கணக்கான பனை மரங்கள் இருந்தன. ஆனால் காலப்போ க்கில் இந்த மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டன. இந்நிலையில், பாலக்கோடு எருதுகூட அள்ளியைச் சேர்ந்த மண்ணின் மைந்தன் கிராம அறக்கட்டளை சார்பில், பெனுகொண்டாபுரம் மா விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் சவுந்திரராஜன் தலைமையில், பெனுகொண்டாபுரம் ஏரிக்கரையில், 10,000 பனை விதைகளை நடவு செய்யும் பணிகள் துவங்கியது. இது குறித்து கூட்டமை ப்பின் தலைவர் சவுந்திரராஜன் கூறியதாவது:

ஒரு பனை மரம் ஆண்டுக்கு 10,000 லிட்டர் மழை நீரை பிடித்து நிலத்தில் இறக்கும். கிருஷ்ணகிரி மாவட்டம் பாறைகள் நிறைந்த மாவட்டமாக உள்ளதால், இங்கு பெய்யும் மழை நிலத்திற்குள் செல்ல தாமதம் ஆவதால், பெரும்பாலான மழை நீர் வீணாகிறது. அதை தடுக்க மாவட்டம் முழுவதும் இதுபோன்று பனை விதைகளை நடவு செய்ய வேண்டும். பனை மரம், நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாப்பதோடு, 10 ஆண்டுக்கு பிறகு ஒரு மரம் ஒரு நாளைக்கு, 1,000 லிட்டர் பதநீரையும், சீசனில் 200 முதல் 300 நுங்கு மற்றும் கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனை ஓலை என ஆண்டுக்கு ஒரு மரத்தின் மூலம் 2 லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். பனை மரத்தின் வேர் 15 அடி ஆழம் வரை செல்லக்கூடியது என்பதால், ஏரிக்கரையில் நடுவதன் மூலம் 100 சதவீதம் மண் அரிப்பை தடுக்கலாம். பனை விதைகளை 10 அடி இடைவெளியில் நட்டு, 2 ஆண்டுக்கு தண்ணீர் விட்டால் போதும். அவை பல ஆண்டுக்கு நமக்கு பலன் தரும். இவ்வாறு அவர் கூறினார்.

# GM செஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலைக் கல்லூரியின் முதலாவது மாநில அளவிலான சதுரங்க போட்டி நடைபெற்றது



தாம்பரம் செப்.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கௌரிவாக்கத்தில் உள்ள பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் GM செஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலைக்கல்லூரியின் 20 செப்டம்பர் 2026 அன்று முதலாவது மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் நடைபெற்றது.

இந்த போட்டிகளை காலை 9 மணி அளவில் கல்லூரியின் துணை சேர்மன் பிரசன்ன வெங்கடேஷ் மற்றும் தாம்பரம் மாநகராட்சி 39வது வார்டு கவுன்சிலர் கிரிஜா சந்திரன் CJP குழுமத்தை சேர்ந்த முனைவர் ஜெய பிரவீன்,,TCS நிறுவனத்தின் அசோசியேட் மதன் அவர்களும் துவக்கி வைத்தனர். மேலும் இதில் சிறப்பு விருந்தினர்களாக செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி துணை தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை,திருவள்ளூர், ராணிப்பேட்டை என அனைத்து மாவட்டங்களில் இருந்து சுமார் 400 செஸ் விளையாட்டு வீரர்கள் இதில் பங்கேற்றனர். ஆறு சுற்றுக்களாக நடைபெற்ற இந்த போட்டிகள் எட்டு வயது பத்து வயது 13 வயது மற்றும் 25 வயது உடையோருக்கான இந்த போட்டிகள் ஆண்கள் பெண்கள் என தனித்தனியாக நடைபெற்ற போட்டிகள் மாலையில் நிறைவு பெற்றன.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முதல் 30 இடங்களை பிடித்து வெற்றி பெற்ற ஆண்கள் பெண்கள் என 200 கும் மேற்பட்டவர்களுக்கு தலைமை விருந்தினராக கலந்து கொண்ட தாம்பரம் மாநகராட்சி மூன்றாவது மண்டல குழு தலைவர் திரு ஜெய பிரதீப் சந்திரன் பரிசுகளை வழங்கினார்.

மேலும் இதில் கலந்து கொண்ட எட்டு வயதுற்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக துணைச் செயலாளர் திரு சம்பத்குமார் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக உறுப்பினர் விசாலாட்சி ஆகியோர் பதக்கங்களை அணிவித்தனர்.

இந்த பரிசளிப்பு விழாவில் மாணவர்கள் பெற்றோர்கள் கல்லூரி ஊழியர்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

இந்தப் பாடல் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை GM Chess அகாடமியின் செயலாளர் மாசிலாமணி அவர்கள் செய்திருந்தார்.

# லட்சுமிபுரம் கிராம மக்களின் நில உரிமை மாநாடு




நாட்றம்பள்ளி, செப்.25-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டம் வெலக்கல்நத்தம் ஊராட்சி லட்சுமிபுரம் கிராம மக்களின் நில உரிமை மாநாடு செப்டம்பர் 24 - 2026 வியாழக்கிழமை மதியம் 12 மணி அளவில் சாமுண்டீஸ்வரி அம்மன் கோவில் அடிவாரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. உழைத்து செழித்த மண்ணில் நில உரிமைக்கான போராட்டம் லட்சுமிபுரம் விவசாயிகள் அரசு வழங்கிய நிலத்திற்கு பட்டா வழங்கக்கோரி நில உரிமை மாநாடு போராட்டம் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில செயலாளர் துளசி நாராயணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

1942 ஆம் ஆண்டு ஆட்சி காலத்தில் நிலவிய கடும் உணவு பஞ்சத்தை போக்கவும் உணவு உற்பத்தியை பெருக்கவும் ஒரு திட்டம் ஒதுக்கப்பட்டது, அதன்படி வெலக்கல்நத்தம் கூட்டுறவு விவசாய காலணித்துவ சங்கம் என் சி 1390 என்ற பெயரில் ஒரு கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டது, அப்பகுதியில் வாழ்ந்த 32 குறவர் பழங்குடியின மக்களையும் தலித் மற்றும் அருந்ததியின் மக்களையும் ஒன்றிணைத்து குடும்பத்திற்கு தலா ஐந்து ஏக்கர் வீதம் மலைப்பகுதி நிலம் வழங்கப்பட்டு விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். பாறைகளும் புதர்களும் ஆகண்டி கிடந்த மலையை இந்த எளிய மக்களின் உழைப்பில் பயன்படுத்தி ராட்சத பாறைகளை உடைத்து நிலத்தை சமன் செய்து விவசாய நிலங்களாக மாற்றினர் நிலமற்ற பாட்டாளிகளின் கூட்டு உழைப்பால் லட்சுமிபுரம் என்ற அழகான கிராமம் உருவெடுத்தது.

இது எங்கள் பாட்டன்களும் முப்பாட்டன்களும் உழுத மண் எங்கள் உழைப்பும் உயர்வையும் சிந்தி பாறைகளை உடைத்து கிணறுகளை வெட்டி உருவாக்கப்பட்ட நந்தவனம் இந்த மண்ணுக்கான சட்டபூர்வமான உரிமையான பட்டாவை மட்டுமே நாங்கள் கோருகிறோம் உழைக்கும் மக்களின் நியாயமான நில உரிமை வென்றெடுக்கவும் அரசுகளின் கவனத்தை ஈர்க்கவும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் செங்கொடி பாதையின் கீழ் உழைக்கும் மக்கள் அனைவரும் நாட்றம்பள்ளி லட்சுமிபுரத்தில் ஒன்றிணைந்து நில உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறோம்.

அரசு கவனத்திற்கு கொண்டு செல்வதற்காக இந்த போராட்டத்தை பட்டாவை பெறும் வரை போராடுவோம் என்று போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வில் துரை, L.G.கேசவன், தங்கராஜ், பெருமாள், சுமதி, யோகலட்சுமி, சிவாஜி, சிங்காரம், காமராஜ், வரதராஜு, வீரபத்திரன், ஆனந்தன், வெங்கடேசன் மற்றும் கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# "ஞானேஷ் குமாரின் செயல்பாடுகளால் ஜனநாயகம் மீதான நம்பிக்கை சீர்குலைவு" - ஜவாஹிருல்லா

சென்னை, செப்.25-

'தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் ஒரு தலைப்பட்ச செயல்பாடுகள் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை சீர்குலைக்கின்றன' என மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய ஜனநாயகத்தின் மிக முக்கியமான அரசியலமைப்புச் சாசன அமைப்புகளில் ஒன்றான இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து தற்போது வெளியாகியுள்ள தகவல்கள் மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்துகின்றன.

தேர்தல் ஆணையம் என்பது தலைமைத் தேர்தல் ஆணையர் ஒருவரின் தனிப்பட்ட அலுவலகம் அல்ல. அது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புச் சாசன அமைப்பு. தேர்தல் தொடர்பான முக்கிய முடிவுகள் வெளிப்படைத்தன்மையுடனும், உரிய ஆலோசனையுடனும், சட்டப்பூர்வமான நடைமுறைகளுடனும் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், கடந்த பல மாதங்களில் வாக்காளர் பட்டியல், புதிய வாக்காளர்களைச் சேர்த்தல், வாக்காளர் பெயர்களை நீக்குதல், தேர்தல் ஆணையத்தின் தொழில்நுட்பக் கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய விவகாரங்களில், தங்களிடம் ஆலோசிக்காமலோ அல்லது தங்களுக்குத் தெரியாமலோ முடிவுகள் எடுக்கப்பட்டதாக இரண்டு தேர்தல் ஆணையர்களே பதிவு செய்துள்ள தகவல்களை இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் அம்பலப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, புதிய வாக்காளர்களுக்கான படிவம் 6-ல் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து ஏனைய இரு தேர்தல் ஆணையர்களே கடுமையான ஆட்சேபனைகளைப் பதிவு செய்துள்ளனர். இது சாதாரண நிர்வாகக் கருத்து வேறுபாடு என்று கடந்து செல்லக்கூடிய விவகாரம் அல்ல.

"தேர்தல் ஆணையம்" என்ற அமைப்பின் பெயரில் முடிவெடுக்கும் அதிகாரம் ஒரே நபரின் கைகளில் குவிவது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாகும். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தமது சக தேர்தல் ஆணையர்களின் கருத்துகளையும் எதிர்ப்புகளையும் புறக்கணித்து ஒருதலைப்பட்சமாக செயல்பட்டதாக எழும் குற்றச்சாட்டுகள் மன்னிக்க முடியாதவை.

ஒருபுறம், இரண்டு தேர்தல் ஆணையர்கள் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆட்சேபனைகளைப் பதிவு செய்ததாக செய்திகள் வெளியாகின்றன. மறுபுறம், தேர்தல் ஆணையம் அனைத்து முடிவுகளும் முழு ஆணையத்தின் ஒருமித்த முடிவுகளே என விளக்கம் அளித்துள்ளது. இந்த இரு நிலைப்பாடுகளுக்கும் இடையிலான உண்மை என்ன என்பதை நாட்டின் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையே இந்திய ஜனநாயகத்தின் அடித்தளங்களில் ஒன்றாகும். அந்த நம்பிக்கையைத் தகர்க்கும் வகையில் அதன் உள்நடவடிக்கைகள் அமைந்து விட்டது கண்டனத்துக்குரியது.

இந்திய மக்களின் வாக்குரிமையையும், தேர்தல் ஜனநாயகத்தின் புனிதத்தையும் பாதுகாக்க வேண்டிய அரசியலமைப்புச் சாசன அமைப்பான தேர்தல் ஆணையம், எந்த அரசியல் அழுத்தத்திற்கும் அப்பாற்பட்டு, முழுமையான சுதந்திரத்துடனும் நம்பகத்தன்மையுடனும் செயல்பட வேண்டும். இது தற்போதைய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் தலைமையில் சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது.

எனவே, இந்திய தேர்தல் ஆணையத்தின் தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# திருத்தப்பட்ட விதியின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் பதவி உயர்வு: சென்னை ஐகோர்ட் உத்தரவும், விளக்கமும்

சென்னை, செப்.25-

தமிழகம் முழுவதும் வருவாய் துறையில் உள்ள தகுதியான ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட விதியின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் பதவி உயர்வு வழங்கலாம் என உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், அந்தப் பதவி உயர்வுகள் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது எனத் தெளிவுபடுத்தியுள்ளது.



தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் உள்ள துணை வட்டாட்சியர் பதவி உயர்வு தொடர்பாக, தமிழ்நாடு வருவாய் சார்புப் பணி விதிகளில் செய்யப்பட்ட திருத்தத்தை எதிர்த்து ஆர்.திருமலை, எஸ்.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் தொடர்ந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளன.

இந்த நிலையில், தங்களது பணிமூப்புக்கு எதிராக அரசு தலையிடுவதைத் தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்கள் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி கோவிந்தராஜன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தன.

அப்போது தமிழக அரசின் தரப்பில் அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் வாதிடுகையில், 'பிரதான வழக்குகளில் தற்போதைய நிலையைத் தொடர வேண்டும் என்ற இடைக்கால உத்தரவால், வருவாய்த் துறையில் உள்ள துணை வட்டாட்சியர் பதவிக்கு, பதவி உயர்வு வழங்குவதில் நிர்வாகச் சிக்கல்களை ஏற்பட்டுள்ளது' எனக் குறிப்பிட்டார்.

மேலும், 'வருவாய்த் துறையில் துணை வட்டாட்சியர் பதவி ஒரு முக்கியமான பதவியாகும் என்பதல அவற்றை, காலியாக வைத்திருப்பது தமிழ்நாட்டின் வருவாய் நிர்வாகத்தைப் பாதிக்கும்' எனவும் வாதிட்டார்.

மனுதாரர்களான வருவாய் துறை ஊழியர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், "வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை 2024-ம் ஆண்டு பிப்ரவரி 27-ல் பிறப்பித்த அரசாணை 65-ல் பின்தேதியிட்ட உத்தரவால், வருவாய்த் துறை ஊழியர்கள் பின்னோக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பழைய நிலைக்கு அனுப்பப்பட்டால் ஊழியர்களின் பணிக்கால பலன்கள் பாதிக்கப்படும். பதவி இறக்கம் என்பது வட்டாட்சியர் பதவிக்கான, பதவி உயர்வின் எதிர்கால வாய்ப்புகளைப் பாதிக்கும்' என்று விளக்கம் அளித்தனர்.

பின்னர் உத்தரவிட்ட நீதிபதிகள், "அரசாணையில் திருத்தப்பட்ட விதிகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளைப் பாதுகாப்பதற்கும், வருவாய் நிர்வாகம் சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்வதற்கும், சமநிலையான அணுகுமுறையை நீதிமன்றம் கையாள வேண்டியது அவசியம்.

அதன்படி, திருத்தப்பட்ட விதிகளை வெளியிடுவதற்கு முன்னர் துணை வட்டாட்சியர்களாக ஏற்கெனவே பதவி உயர்வு பெற்ற உதவியாளர்கள், கீழ்நிலைப் பதவிக்குத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். திருத்தப்பட்ட விதியின் அடிப்படையில் தகுதியுள்ள ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கலாம். ஆனால், அவை இந்த வழக்குகளின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என பதவி உயர்வு உத்தரவில் குறிப்பிட வேண்டும்' என்று கூறி, இடைக்கால மனுக்களை முடித்துவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மேலும், பிரதான வழக்குகள் மீதான விசாரணையையும் இரண்டு வாரங்களுக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# 'ஜெம்' வீரமணி போக்சோ வழக்கு: சாந்தி ஜாமீன் மனு மீது மத்திய குற்றப்பிரிவு பதிலளிக்க உத்தரவு

சென்னை, செப்.25-

'ஜெம்' வீரமணி மீதான போக்சோ வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு பதிலளிக்க சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இருவரும் தாக்கல் செய்துள்ள ஜாமீன் மனுக்களில், ஆகஸ்ட் 28-ம் தேதி கைது செய்து, 29-ம் தேதி தான் நீதிமன்றத்தில் அஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். கடந்த 2019-ம் ஆண்டு நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, 6 ஆண்டுகள் தாமதமாக 2025-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் தேதி இந்திய குழந்தைகள் நல அமைப்பு அளித்த புகாரில், 2025-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தாமதத்துக்கு எந்த விளக்கமும் இல்லாததால், வழக்கில் சந்தேகம் எழுந்துள்ளது எனக் குறிப்பி ட்டுள்ளனர்.

இவரும் எந்தக் குற்றத்திலும் ஈடுபடவி ல்லை; புகார்தாரர் பாதிக்கப்பட்டவரோ, பாதிக்கப்பட்ட சிறுமிகளின் பெற்றோரோ, பாதுகாவலர்களோ அல்ல; பாதிக்கப்பட்ட எந்த சிறுமியும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை; வழக்கில் காவல் துறையினர் தான் சாட்சிகளாக உள்ளனர்; அவர்களின் வாக்குமூலங்கள் காவல் துறை வசம் தான் உள்ளன என்பதால் சாட்சியங்களை கலைக்க வாய்ப்பில்லை; கைது செய்து 24 மணி நேரத்துக்கு பிறகே தங்களை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர் எனவும் மனுவில் குற்றம்சாட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்டு மூன்று வாரங்கள் நெருங்கும் நிலையில் இதுவரை தங்களை காவலில் வைத்து விசாரிக்கக் கோரி காவல் துறை தரப்பில் மனு தாக்கல் செய்யாததாலும், ஆதாரங்கள் ஏற்கனவே சேகரிக்கப்ப ட்டுவி ட்டதாலும், தொடர்ந்து தங்களை சிறையில் அடைத்து வைத்திருக்க அவசியமி ல்லை என்பதால் இருவருக்கும் ஜாமீன் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த மனு நீதிபதி பத்மா முன்பு விசாரணைக்கு வந்தபோது, காவல்துறை தரப்பில் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் விவரங்கள் மிக ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களை நீதிமன்ற காவலில் அடைப்பதில் எந்த தாமதமும் இல்லை. அனைத்து நடவடிக்கைகளும் சட்டப்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டு, விரிவான பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கேட்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இருவரின் ஜாமீன் மனுவுக்கும் சென்னை மத்திய குற்றப்பிரிவு பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி, வழக்கின் விசாரணையை செப்டம்பர் 29-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளார்.



# தாராபுரத்தில் நடந்த அமைச்சர்கள் ஆலோசனை கூட்டத்தில் மின்வெட்டு

திருப்பூர், செப்.25-

தாராபுரத்தில் நடந்த அமைச்சர்கள் ஆலோசனை கூட்டத்தில் மின்வெட்டு ஏற்பட்டது. கட்சி நிர்வாகிகள், தொண்டர்களிடையே அமைச்சர் செங்கோட்டையன் பேசிக் கொண்டிருந்த போது மின்வெட்டு ஏற்பட்டது.

அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் கலந்துகொண்ட கூட்டங்களில் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மின்வெட்டு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொடர்ச்சியாக மின்வெட்டு ஏற்பட்டு வருவது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.உலக வரைபடங்களை ஆராய்

நேற்று சென்னையில் உள்ள மின் வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் விஜய் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். இந்நிலையில் இன்று தாராபுரத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், அருண் ராஜ் உள்ளிட்ட 5 அமைச்சர்கள் கலந்துகொண்ட தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் செங்கோட்டையன் பேசிக் கொண்டிருக்கும்போதே மின்வெட்டு ஏற்பட்டது. ஏற்கனவே செங்கோட்டையன் பத்திரிகையாளர் சந்திப்பின்போதும் மின்வெட்டு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேபோல மதுராந்தகத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பங்கேற்ற ஒரு கூட்டத்திலும் அவர் பேசிக்கொண்டிருக்கும்போது மின்வெட்டு ஏற்பட்டது. உடனடியாக 'ஜெனெரேட்டர் போடுங்கள்' என்று கூற, ஜெனெரேட்டர் இயக்கப்பட்டதால் ஆதவ் தனது பேச்சைத் தொடர்ந்தார். தவெகவின் முக்கிய அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டங்களிலேயே மின்வெட்டு ஏற்பட்டது பேசுபொருளாகியுள்ளது.

# "ஜெம் வீரமணி வழக்கில் சிபிஐ விசாரணை தேவையில்லை" - வைகோ

சென்னை, செப்.25-

'ஜெம்' கிரானைட் வீரமணி மீதான போக்சோ வழக்கு, முதல்வர் விஜய்யின் வழிகாட்டுதலின்படி விசாரணை சரியான திசையில் நகர்வதால், இந்த வழக்கில் சிபிஐ அல்லது விசாரணை ஆணையம் தேவையில்லை என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இளம் பிஞ்சுகளை நாசப்படுத்திய ஜெம் கிரானைட் வீரமணி போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டு காவல் துறை விசாரணையும் வேகம் எடுத்திருக்கிறது.

தொழிலதிபர் வீரமணியால், தமிழகத்துக்கும் இழிவையும், தலைகுனிவையும் ஏற்படுத்தி இருக்கும் இந்த வழக்கு, முதல்வர் விஜய்யின் நேரடி கண்காணிப்பின் கீழ் முறையாக சென்று கொண்டு இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பல ஆண்டு காலமாக குழந்தைகளை இந்தக் கொடூரத்துக்கு இரையாக்கிய தொழிலதிபர் ஜெம் கிரானைட் வீரமணி மட்டுமில்லாமல், இதற்குத் துணை போனவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் கண்டறிந்து கைது செய்து குற்றக் கூண்டில் நிறுத்தி தண்டிக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில், "தொழிலதிபர் வீரமணியின் வழக்கை ஆழக் குழி தோண்டிப் புதைப்பதற்கு திட்டம் தீட்டிய காவல் துறை அதிகாரிகள், அரச பீடத்திலிருந்து உதவிய பெரிய மனிதர்கள், இடைத்தரகர்கள் எவரும் இந்த வழக்கில் தப்பித்து விடக்கூடாது என்று முதல்வர் விஜய் உத்தரவிட்டிருக்கிறார்" என்ற செய்தி நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையைத் தருகிறது. இந்த வழக்கில் எவ்வித அழுத்தங்களுக்கும் விஜய் அரசு இடம் தராது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதல்வரின் வழிகாட்டுதலில் இந்த வழக்கின் விசாரணை சரியான திசையில் நடத்தப்பட்டு வரும்போது, விசாரணை ஆணையம் மற்றும் சிபிஐ விசாரணை என்பது தேவையற்றது.

அத்தகைய கோரிக்கைகளை நிராகரித்து, ஜெம் கிரானைட் வீரமணி வழக்கில் விரைந்து விசாரணையை முடித்து, நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்து தண்டனை பெற்றுத்தர தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# காவிரி பாசன மாவட்டங்களில் 6 லட்சம் நெல் மூட்டைகள் தேக்கம்: அன்புமணி கண்டனம்

சென்னை, செப்.25-

தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 6 லட்சத்துக்கும் அதிகமான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பதற்கு பாமக தலைவர் அன்புமணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 6 லட்சத்திற்கும் கூடுதலான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. விவசாயிகள் அரும்பாடு பட்டு விளைவித்த நெல் மூட்டைகளை உரிய காலத்தில் கொள்முதல் செய்யாமல் அலைக்கழிப்பது கண்டிக்கத்தக்கது.

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சம் நெல் மூட்டைகளும், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட பிற பாசன மாவட்டங்களில் 3 லட்சம் மூட்டைகளும் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதனால், நெல்லை அறுவடை செய்த விவசாயிகள் நெல் மூட்டைகளுடன் இரவு பகலாக கொள்முதல் நிலையங்களில் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அங்கிருந்து கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படாதது, கொள்முதல் நிலையங்களில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாதது உள்ளிட்டவை தான் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடப்பதற்கு காரணம் ஆகும்.

காவிரி பாசன மாவட்டங்களில் அடுத்த சில நாள்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள நிலையில், நெல் மூட்டைகள் உடனடியாக கொள்முதல் செய்யப்படவில்லை என்றால் உழவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்படும். அப்படி ஒரு நிலை ஏற்படுவதை அரசு அனுமதிக்கக் கூடாது.

கொள்முதல் நிலையங்களில் சேரும் நெல் மூட்டைகளை உடனுக்குடன் கிடங்குகளுக்கும், அரவை நிலையங்களுக்கும் கொண்டு செல்வதற்கான வசதிகளை தமிழக அரசு செய்திருக்க வேண்டும். ஆனால், கடந்த காலங்களைப் போலவே நடப்பாண்டிலும் போதிய கிடங்கு வசதிகள் இல்லாததும், நெல் மூட்டைகள் உடனுக்குடன் அகற்றப்படாததும் நெல் கொள்முதலை பாதித்திருக்கிறது.

நெல் மூட்டைகளை கொள்முதல் செய்து அடுக்கி வைக்கும் பணிகளில் ஈடுபடும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி மிகவும் குறைவாக இருப்பதால், போதிய எண்ணிக்கையில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பணிக்கு வருவதில்லை.

ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திலும் 30% சுமை தூக்கும் தொழிலாளர்கள் மட்டுமே பணிக்கு வருவதால் ஒவ்வொரு நாளும் 900 முதல் 1000 மூட்டைகள் வரை கொள்முதல் செய்யப்படுவதற்கு பதிலாக, 300 முதல் 400 மூட்டைகள் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை அறுவடை இப்போது தான் தொடங்கியிருக்கிறது. அடுத்து வரும் நாள்களில் அறுவடை தீவிரமடையும் போது கொள்முதல் நிலையங்களில் இன்னும் பல மடங்கு நெல் மூட்டைகள் தேங்கும் நிலை உருவாகும்.

இந்த நிலைமையை மாற்ற கிடங்குகள் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பற்றாக்குறையை சரி செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகளை உடனுக்குடன் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# எப்கியூஎல் மோசடி வழக்கு: குற்றம்சாட்டப்பட்ட நபர்களை எதிர்மனுதாரர்களாக சேர்க்க உத்தரவு

மதுரை, செப்.25-

எப்கியூஎல் மோசடி வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரிய வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவர்களை எதிர்மனுதாரர்களாக சேர்க்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



மதுரை மேலூரைச் சேர்ந்த சாந்தகுமார் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொதுநல மனுவில், 'எப்கியூஎல் செயலியில் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் என பல மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் ரூ.1,000 கோடிக்கும் மேல் முதலீடு செய்து ஏமாற்றப்பட்டுள்ளனர். இதில் முதலீடு செய்தவர்கள் பெரும்பாலும் பெண்கள், ஏழை, நடுத்தர வகுப்பினர் மற்றும் கூலித் தொழிலாளர்கள்.

இந்த செயலி கிரிப்டோ கரன்சி, அமெரிக்க டாலர் போன்ற சர்வதேச தொடர்புகளோடு இருப்பதாலும், இணையத்தை பயன்படுத்தி மோசடி நடைபெற்றுள்ளதாலும், விசாரணையை சிபிஐ-க்கு மாற்றி உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சி.வி கார்த்திகேயன், ஆர். சக்திவேல் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், "இந்த வழக்கை பொருளாதார குற்றப்பிரிவு காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். மனுதாரரும் பாதிக்கப்பட்டவர் என்பதால் அவர் இதனை பொதுநல வழக்காக தொடர முடியாது. இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், 'குற்றம்சாட்டப்பட்டவர்களின் கருத்தை கேட்காமல் வழக்கை சிபிஐ-க்கு மாற்ற முடியாது. எனவே, குற்றம்சாட்டப்பட்டவர்களையும் வழக்கில் எதி ர்மனுதாரராக சேர்க்க மனுதாரருக்கு உத்தர விட்டு, மனு விசாரணைக்கு உகந்ததா, இல்லையா என்பதை முடிவு செய்வதற்காக விசாரணையை அக்.8-க்கு ஒத்திவைக்கப்படுகிறது' என உத்தரவிட்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161